செ.வெ.எண்:16 நாள்:07.06.2019

## கரூர் மாவட்டம்

**"புகழூர் வட்டம் உருவானது வரலாற்றில் பதிவுசெய்யக்கூடிய நிகழ்வு" - புகழூர் வட்டாட்சியர் அலுவலகத்தை திறந்து வைத்து மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் பேச்சு**

அதன் விபரம் வருமாறு:

கரூர் மாவட்டத்தில் வேலாயுதம்பாளையத்தை தலைமையிடமாகக் கொண்டு புகழூர் வருவாய் வட்டம் புதிதாக உருவாக்கப்படுவதாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 05.03.2019 அன்று உத்தரவு பிறப்பித்தார்கள். அதனடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள புகழூர் வட்டத்துக்கான வட்டாட்சியர் அலுவலகத்தை, வேலாயுதம்பாளையத்தில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜபாஸ்கர் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் தலைமையில் இன்று(07.06.2019) திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:

மாண்புமிகு தமிழக முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களின் நல்லாசியுடன் செயல்படும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் எடப்பாடி.திரு.கே.பழனிசாமி அவர்கள் கரூர் மாவட்டத்திற்கென்று எண்ணிலடங்கா நல்ல பல திட்டங்களை அறிவித்து செயல்படுத்தியுள்ளார்கள். அதில் குறிப்பிடத்தகுந்த வரலாற்றுச்சிறப்புமிக்க திட்டம்தான் வேலாயுதம்பாளையத்தை தலைமையிடமாகக்கொண்டு உருவாக்கப்பட்டுள்ள புகழூர் வட்டமாகும்.

மாவட்டத்தில் ஒரு புதிய வருவாய் வட்டம் உருவாக்கப்படவேண்டும் என்றால் அது 30 கிராமங்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்பதே அரசு விதி. ஆனால் புகழூர் வட்டத்தில் 27 கிராமங்கள் மட்டுமே உள்ளதால் புதிய வட்டமாக அறிவிக்க இயலாக சூழல் இருந்து வந்தது. இதை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று, சிறப்பு அனுமதி பெற்று இதற்கென்று தனி அரசாணை பெறப்பட்டு உருவாக்கப்பட்ட சிறப்புபெற்ற வட்டமாக புகழூர் வட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி மண்மங்கலம் மற்றும் அரவக்குறிச்சி வருவாய் வட்டங்களை சீரமைத்து வேலாயுதம்பாளையத்தை தலைமையிடமாகக்கொண்டு தென்னிலை, க.பரமத்தி மற்றும் புகழூர் ஆகிய மூன்று குறுவட்டங்களுடன் 27 வருவாய் கிராமங்களை உள்ளடக்கியதாக புகழூர் வருவாய் வட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த வட்டாட்சியர் அலுவலகம் என்பது வரலாற்றில் இடம்பெறக்கூடிய நிகழ்வாக அமைந்திருக்கின்றது.

அதுமட்டுமல்லாது புஞ்சைபுகழூர் பகுதியில் காவிரியாற்றின் குறுக்கே ரூ.490 கோடி மதிப்பீட்டில் 1 டி.எம்.சி. நீரை தேக்கும் வகையில் கதவணை அமைக்கவும், கரூர் மாவட்டத்தின் நெரூரையும், திருச்சி மாவட்டத்தின் உன்னியூரையும் இணைக்கும் வகையிலே ரூ.83கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலம் அமைக்கவும், கரூர் இரயில் நிலையத்தில் இருந்து கரூர் நகரப்பகுதியில் உள்ள 20 சாலைகளை இணைத்து, புறவழிச்சாலையை சென்றடையும் வகையில் ரூ.22.12 கோடி மதிப்பீட்டில் "அம்மா சாலை" அமைக்கவும், அரவக்குறிச்சி மற்றும் பரமத்தி ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.250கோடி செலவில் மிகப்பெரிய குடிநீர் திட்டத்தை செயல்படுத்தவும் உத்தரவிட்டுருப்பவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் என்பதை அனைவரும் எண்ணிப்பார்க்க வேண்டும். கரூர் மாவட்டம் சிறிய மாவட்டமாக இருந்தாலும், ஏற்கனவே ஒரு கதவணை இருக்கும்போதும், புஞ்சை புகழூரில் ஒரு புதிய கதவணை என்ற அறிவிப்பு வரலாற்றுச்சிறப்பு மிக்க அறிவிப்பாகும். அதுமட்டுமல்லாது, வருவாய்த்துறையின் மூலம் 30,000 பேருக்கு மாதம் ரூ.1000 மாதாந்திர முதியோர் உதவித்தொகை வழங்கப்பட்டுவருகின்றது.

இந்தப்பகுதியில் உள்ள டிஎன்பிஎல்.காகித ஆலை மாண்புமிகு தமிழக முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் உருவாக்கப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களால் விரிவுபடுத்தப்பட்டு தற்போது புதிய சிமெண்ட ஆலையும் அமைக்கப்பட்டு நேரடியாகவும், மறைமுகமாகவும் பல்லாயிரக்கணக்கான நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது என்பதை மக்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

அரவக்குறிச்சி பகுதியில் உள்ள மண்சாலைகள் அனைத்தையும் தார்ச்சாலைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த இரண்டாடுகளில் மட்டும் அரவக்குறிச்சி பகுதிக்கு சுமார் 90 கோடி மதிப்பிலான சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளது. இந்த வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வந்துசெல்ல போக்குவரத்து வசதி செய்து தரவேண்டும் என்ற பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று அரவக்குறிச்சி, தென்னிலை, நொய்யல், சின்னதாராபுரம், வேலாயுதம்பாளையம், க.பரமத்தி, வேலூர் உள்ளிட்ட 7 வழித்தடங்களில் பேருந்து வசதி மேம்படுத்த வழிவகை செய்யப்படும்.

கரூர் மாவட்ட மக்களுக்குத்தேவையான அனைத்து நலத்திட்டங்களையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து வழங்கி வருகின்றார்கள் என்பதை பெருமையோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.
இவ்வாறு தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து வருவாய்த்துறையின் மூலம் 37 நபர்களுக்கு வருமானச்சான்றிதழ்களையும், 13 நபர்களுக்கு இருப்பிடச்சான்றிதழ்களையும், 18 நபர்களுக்கு சாதிச்சான்றிதழ்களையும், ஒரு நபருக்கு முதல் பட்டதாரிக்கான சான்றிதழ்களையும், 10 நபர்களுக்கு வாரிசுச்சான்றிதழ்களையும், 31 நபர்களுக்கு ரூ.7.44 லட்சம் மதிப்பிலான விலையில்லா வீட்டுமனைப்பட்டாக்களையும் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.ம.கீதா, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.சூர்யபிரகாஷ், கரூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.கு.சரவணமூர்த்தி, முன்னாள் அமைச்சர் திரு.பாப்பாசுந்தரம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.காமராஜ், திரு.பிசி.இராமசாமி, கூட்டுறவு சங்கப்பிரதிநிதிகள் திரு.ஏ.ஆர்.காளியப்பன், திரு.திருவிக, திரு.வை.நெடுஞ்செழியன், திரு.என்.எஸ்.கிருஷ்ணன், திரு.வி.சி.கே.ஜெயராஸ், திரு.குருசாமி, திருமதி.ரேணுகா, தென்னக இரயில்வே ஆலோசனைக்குழு உறுப்பினர்கள் திரு.சிவசாமி, திரு.பழனிச்சாமி, புகழூர் வட்டாட்சியர் திரு.ம.இராஜசேகரன் உள்ளிட்ட அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**